
# தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்.

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா. | வெளிநாடு மூன்றணா | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6

| மலர் 2 | சென்னை | 6—8—55 | சனிக்கிழமை | இதழ் 8 |
|---|---|---|---|---|


## உனக்கும் எனக்கும் உறவு காட்டி உலகம் சொன்னது கதையே!



படம் : K. அருணாசலம்.

நீயும் நானும் என்ற பிணைப்பிலிருந்து கடைசியில் நான் மட்டுமாக மிஞ்சப்போகிறேன்.

பயணத்திற்கான நேரம் நெருங்கி விட்டது.

இந்த உண்மையை நண்பர்கள் எவருமே அறிந்தாரில்லை. எப்பொழுதும்போல் அவர்கள் இருகிறார்கள்; வேடிக்கை பேசித் தங்களை சிரிக்கவைக்கப் பணிக்கின்றனர்.

அவர்களுக்காக நான் என்னென்னவெல்லாமோ சொல்கிறேன். என் சிரிப்பினுள் பொதிந்து கிடக்கும் துயரத்தை ஏனோ அவர்கள் கண்டு கொள்ளவில்லை.

நான் சூன்யத்தில் கலக்கப் போகிறேன்.

சூன்யம் முக்கியமற்ற ஒரு நிகழ்ச்சி. தோற்றம் - அதுதான் முக்கியம். இரண்டிற்கும் இடையேயுள்ள கணநேரப் பொழுதுதான் நான். நிகழ்காலத்தின் விளிம்பில் ஊசலாடும் எதிர்காலம்.

முடிந்தது - இல்லை. முடியப் போகிறேன். மறுகணம் - நான் என்பது வெறும் ஒரு நினைவு மட்டும்.

நான் நடந்து சென்ற காலடையாளங்களை என் பின்னால் நடந்து வருபவர்கள் அழித்துவிடுவார்கள். அவர்களின் பின்னால் வருபவர்கள் அவர்கள் காலடிகளையும் அழித்து விடுவார்கள்......சுழலும் உலகம் மண் மூடிப்போன தலைமுறையைத் திரும்பிக்கூடப் பார்ப்பதில்லை. புதுமைதான் வேண்டும். நிர்வாணமான புதுமை!

நீ என்ன நினைத்துக்கொள்வாயோ என்னமோ!

பழக்கப்பட்டவர்கள் எல்லோருமே போய்விட்டார்கள்.

அவர்கள் எங்கே போனார்களோ? எனக்குமுன்சென்றவர்கள்-நினைவுகள் வீணாக ஆரம்பத்தை தொட முயற்சிக்கின்றன.

அவர்கள் எங்கே போனார்களோ?

பொல்லாமைகளின் எல்லையில் நான் வந்தடைந்தது போல. எனக்கு கண்டுகளிக்க எதுவும் இல்லை; கேட்டு இன்புறவும்! ஒரு பயங்கர ஓசை. அண்டகூரகத்திலே ஒரு பேரிரைச்சல். இயற்கை அமைதியாகக் கண்ணீர் விடுகிறது. மழைத் தூறல்!!

(8-ம் பக்கம் பார்க்க)

# திருஞான சம்பந்தர் தேவாரம் பாடினாரா ?

**தமிழண்ணல்**

திருஞான சம்பந்தர் தமது மூன்றாவது வயதிலேயே ஞானப்பால் உண்டு தேவாரம் பாடியதாகப் புராணங்கள் கூறுகின்றன. இது இயற்கைக்கும் வரலாற்றுக்கும் ஒத்து வரும் செய்தியா என்பது ஆராயத் தக்கது. சம்பந்தர் தேவாரப் பதிப்புகளின் முன்னுரைகளில் பட்டும் படாமலும் குறிப்பிட்டுவிட்டு விடப்பெற்ற வரலாற்றுச் செய்தி ஒன்றை, இங்கே விரித்துரைக்க விரும்புகிறோம். இதைப் படித்ததும் 'பக்தர்'கள் பதறுவார்கள். வரலாற்று ஆசிரியன் என்றும் உண்மைக்கு அடிபணியும் மனப்போக்கு உடையவனாக இருக்கவேண்டும் என்ற உண்மை அடிப்படையை மனத்துடன் கொண்டால் 'பக்தர்களின்' பதற்றம் குறைதல் கூடும்.

மனிதர்களில் சிலர் மனிதப் பொதுவியல்பைக் கடந்த தனித்ததொரு சிறப்பினை வெளிப்படுத்துவோராய் விளங்குதல் ஆங்காங்கு நடைபெறும் இயற்கை நிகழ்ச்சியேயாகும். கண்ணற்ற ஒருவர் மதுரையில் எந்தக் கணக்கையும் கைகளினுதவியின்றியே உடனுக்குடன் செய்து முடிவு கூறுவதைக் கண்ணாரக் காண்கிறோம். இரண்டடி, மூன்றடி உயரத்தில் உள்ளவும் மனிதர்களும் இருக்கிறார்கள். இவ்வாறு மூளைஉழைப்பிலும், உடலுழைப்பிலும், விளையாட்டிலும் வேடிக்கையிலும் மனிதப் பொதுவியல்பைக் கடந்து விளங்குவோர் உலகத்தில் உண்டு. அவை இயற்கை வளர்ச்சியிலே உள்ள உள்ளது சிறத்தலாகிய (Evolution) பண்பில் ஏற்பட்ட சிறு வேறுபாட்டின் விளைவாகவோ குறைவாகவோ இருப்பதால் நமதறிவு உண்மையென ஒப்புகிறது. ஆனால் மூன்று வயதுச் சம்பந்தர் ஆயிரக்கணக்கான சமயப் பிரச்சாரப் பாடல்களைப் பாடினார் என்பது இப்பண்புக்கும் ஒவ்வாத கற்பனையாக—கட்டுக்கதையாக இருக்கிறது.

**'நேபாள பாபா'** என்ற ஒரு சிறுவனைப் படம்பிடித்துப் போட்டு, இந்த நாட்டுத் தினசரிப் பத்திரிகைகள் பல 'தீராத நோயெல்லாம் தீர்த்துவைக்கும் பாபா' என விளம்பரத்தின்மேல் விளம்பரம் செய்ததும் அதன்மூலம் கடவுளின் 'அதீத சக்தியை', மானிடன் பெற்ற தெய்வ அருளை உலகிற்குப் பறைசாற்ற அவ்வேடுகள் ஆரவாரித்ததும் நாடறிந்ததே. கடைசியாக எல்லாம் புரட்டு என்பது வெளிப்பட்டதோடு அல்லாமல், இந்தப் பத்திரிகைகளின் பயங்கரச் சேட்டையால் லட்சக் கணக்கான மக்கள் நேபாள பாபாவைத் தரிசிக்கக் கிளம்பவே; கூட்டம் அதிகமாகி நெருக்கடி ஏற்பட்டு அதனால் மக்கட்கு பிளேக், காலரா போன்ற வராத நோயெல்லாம் வந்து செத்துச் சீரழிந்ததும் நாம் அதே பத்திரிகைகளில் படித்ததே! கடைசியாக இந்திய அரசாங்கமே எச்சரிக்கை செய்து, அறிக்கைகள்விட்டு மக்களை ஆபத்திலினின்றும் காக்க நேரிட்டது.

**குடகு தனலட்சுமி** பசியா வரம் பெற்றவள் என்று படம் பிடித்துப் போட்டுப் பறைசாற்றி "நமது காலத்திலே தெய்வீகத் தன்மை பாரீர், புராண இதிகாசங்களைக் கேலி செய்கிறீரே பாரீர்" என மார் தட்டினர். கடைசியில் பெங்களூர் டாக்டர்கள் உண்மையை வெளிப்படுத்தினர். அவளைப் பெற்றோரிடமிருந்து விலக்கித் தனியே வைத்திருந்து பரிசோதித்த இரண்டொரு நாட்களில் அவள் பசியால் துடிப்பதைக் கண்டறிந்தனர். பசியை ஓரளவு அடக்கிக்கொள்ளும் சக்தி உண்டே தவிர, உண்ணாமலே உயிர் வாழும் 'வரப்பிரசாதம்' பெற்றவளல்லள் என்ற உண்மையை உலகிற்கு உணர்த்தினர். இவ்வாறு உண்மையை எடுத்துக் காட்டியதால் அந்த 'டாக்டர்கள்' தெய்வ சக்தியை மறுத்து விட்டார்கள்--நாத்தழும் பேறிய நாத்திகர்கள் என்று எந்தப் பத்திரிகைக் காரரும் பிறகு கண்டித்து எழுதவில்லை. 'கடவுளே இந்த அநியாயத்தைக் கேட்கட்டும்' என்று விட்டுவிட்டார்கள் போலிருக்கிறது!

ஆக இருபதாம் நூற்றாண்டிலும் இத்தகைய அதிசயங்களைக் காட்டி மக்களை ஏமாற்ற முனைந்த இரண்டு நிகழ்ச்சிகளும் முழுத் தோல்வியடைந்தன. திருஞான சம்பந்தர் பற்றிய கதையும் இது போல கி. பி. 7-ஆம் நூற்றாண்டிலே கட்டிவிடப்பெற்ற புரளியாக இருக்கும் என எண்ண இடமிருக்கிறது.

தமிழகத்தின் இடைக்காலம், மதவாதிகள் செல்வாக்குப் பெற்று, போட்டியிட்டு அறியாமையை வளர்த்தகாலம். தங்கள் தங்கள் மதமே பெருகவேண்டுமென விரும்பியவர்கள் தங்களால் இயன்ற வரை தங்கள் மதத்தைப் பின்பற்றியவர்களிடையே அதிசயங்கள் நிகழ்ந்ததாகவும், அருள் வரப்பிரசாதம் பெற்றதாகவும் கூறி அறியாமை, வறுமை, வயப்பட்ட மக்களைத் தங்கள் பாற்கவர முயன்றகாலம். இதனால் ஒரு மதத்தாரின் புளுகை வெல்ல மற்றொரு மதத்தார் அதிகப் புளுகர்களாக விளங்கினர். எங்கள் மதத்திலே சேர்ந்தால் இறைவன் நினைத்ததும் காட்சியளிப்பாரென்று ஒருவர் கதை கட்டினால் மற்ற மதத்தார் எங்கள் கடவுள் நினைக்காமலே வந்து காட்சி தந்து வேண்டிய காணிகரையும், வரங்களும் தருவார் என்று கதை கட்டிய காலம். சுருக்கமாக இதை விளக்க வேண்டுமானால் இன்றைக்குக் குறுக்குவார்த்தைப் போட்டிக் காரர்கள் 2 லட்சம் 3 லட்சம் என்று எவ்வளவு முடியுமோ அவ்வளவு தொகையைப் பெருக்கி மக்களைக் கவர முயலுகிறார்களே அதுவே சரியான உதாரணமாகும்.

சம்பந்தர் குழந்தையாக இருக்கும்போதே, பெரியவர்போல வாழ்க்கை அனுபவங்களை வைத்துத் தமிழையும் வடமொழி நான்மறைகளையும் சரிக்குச்சரி சார்ந்து தேவாரப்பதிகங்களைப் பாடினார் என்ற சதையும் இத்தகைய மதவாத நோயால் சென்று, எழுந்ததேயாம். சம்பந்தரைக் குளத்திற்குத் தூக்கிச் சென்று, மூன்று வயதுக் குழந்தையைத் துணையின்றி கரையிலே விட்டுவிட்டு, தந்தை தலை முழுகச் சென்றாராம். தந்தையின் மூளையைக் கண்டு வியக்கத்தான் வேண்டும்.

உடனே குழந்தை 'அம்மா, அப்பாவை' நினைந்து அழ, அக் குரல் கேட்டு சீகாழியில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் பார்வதி

> **'சின்ன வயதிலே கன்னித்தமிழிலே சொன்னான் ஒரு பாட்டு'- என்ற கருத்துக்கொவ்வாத கூற்று, மெய்யா, பொய்யா, என்பதன் ஆராய்ச்சிக் கட்டுரை இது. கட்டுரையாளர் தமிழண்ணல் பண்பட்ட எழுத்தாளர்--தமிழ்ப் புலவருங்கூட.**

தேவியாருடன் வந்து இடபவாகனராய்க் காட்சியளித்து பார்வதியைப் பாலூட்டப் பணிக்கவே, அவரும் பாலூட்டினாராம்...பின்னர் இதையெல்லாம் கவனியாது குளத்திலே மூழ்கியிருந்த சம்பந்தரின் தந்தை வந்து குழந்தையை, பாலூட்டியது யாரென்று கேட்கக் குழந்தை தோடுடைய செவியனைக் காட்டிப் பாடியதாம். பிறகு அவர் தந்தையார் தம் தோளிலேயே தூக்கிக் கொண்டு தலந்தோறும் செல்ல அங்கெல்லாம் இவர்பாடினாராம்.

சிறுபிள்ளைகள் **'காமிராவைப் போல'** கண்ட காட்சிகளை அப்படியே மனத்தில் படம் பிடித்துக்கொள்ளும். அக்காட்சி **'நெகடிவ்'** ஆக இருந்தாலும், வளரும் காலத்தில் **'பிரிண்ட்'** ஆக ரசாயன மாறுதல் பெறுகிறது. மேலும் கிளிப்பிள்ளைகளைப்போலக் கேட்கும் ஒலிகளைத் திரும்ப உரைக்க விரும்புவதும், முயல்வதும், வெற்றிபெறுவதும் குழந்தை மொழிவளர்ச்சியின் படிகளாகும். வளர்ந்தவர்களை விடச் சிறு குழந்தைகள் பாடல்களை மனப்பாடம் செய்து ஒப்பிப் பதில் வல்லன. அதற்கு ஏற்பப் பழகக வேண்டும். நான்கு, ஐந்து வயது மதிக்கக்கூடிய சிறுவன் ஒருவன் சோதிடம் சொல்லுகிறான். சோதிடப் பிழைப்பு நடத்துவோன் சில அட்டைகளில் பலன்களை எழுதி வைத்து, அவற்றில் ஏதேனும் ஒன்றை எடுக்கச்சொல்லி அந்த அட்டையிலுள்ளதைப் படித்துப் பலன் சொல்லுவான், (இன்றையப் பத்திரிகைகள் சில சோதிடப் பிழைப்பு நடத்தி தங்கள் பத்திரிகைகளை அதிகம் 'அழிக்க' விரும்புவதுபோல) இவ்வாறு அட்டையில் எழுதிவைத்துப் படிப்பதால் அதிக பலன்கள் இல்லாததை அறிந்த தந்தை தன் 5 வயதுப் பாலகனுக்கு இந்த அட்டைகளில் உள்ள 'பலா பலன்களை' மனப்பாடம்செய்து வைத்து ஊரூராக அழைத்துச் சென்று, அவனை ஏதேனும் ஒரு பலனை ஒருவருக்கு முன் ஒப்பிக்குமாறு செய்து அதிக வருமானம் தேடிவருகிறான். சிறு குழந்தைகளின் இயல்பில் மிக உயர்ந்த தனிப்பண்பாக இருப்பது **மனப்பாடம் செய்து அப்படியே ஒப்பிக்கும்** பழக்கமேயாகும்.

திருஞான சம்பந்தர் தலந்தோறும் சென்று இறைவனை வழிபட்டுப் பாடிவருகையில் கூடவே இரண்டுபேர் செல்வார்களாம். மூன்று வயதுக் குழந்தை அல்லவா ! துணையாகச் சென்றிருப்பர். காணிக்கை மூட்டைகளைச் சுமக்கவும் சம்பந்தரைத் தோளிலே தூக்கிச் செல்வாராம். மற்றவர் சம்பந்தருக்கு மாமனாம்.

நல்லம்மான் என்று இவர் அழைக்கப்படுகிறார். இவர் சம்பந்தர் பாடல்களை அவ்வப்போது ஏட்டில் எழுதிக்கொண்டே வந்தாராம். இவர் பெயர் என்ன தெரியுமா? சம்பந்த சரணாலயர்! இங்கேதான் இருக்கிறது சூட்சுமம். மூன்று வயது சம்பந்தர் பாடியவற்றை சம்பந்த சரணாலயர் ஏட்டிலே எழுதினாரா? சம்பந்தசரணாலயர் பாடி எழுதிவைத்தவற்றைச் சம்பந்தர் மனப்பாடம் செய்து ஒப்பித்து, அதன் மூலம் 'சிறுகுழந்தை வரம் பெற்றுப் பாடுவது காணீர்' என மக்கள் கவனத்தைத் திருப்பிக் காணிக்கைபெருக்கி மதம் வளர மார்க்கம் செய்தனரா என்பது சிந்திக்கத்தக்கது. சமண மதம் பரவியிருந்த போது இதுபோன்ற அதிசயங்களைக் கற்பித்து மக்களையும் மன்னர்களையும் மயக்கி தங்கள் மதத்தை உயிர்ப்பிக்கச் சைவர் கையாண்ட வழிகளிலே ஒன்றுதான் இக்கட்டுக்கதையெனலாம்.

(8-ம் பக்கம் பார்க்க)


## ஏஜண்டுகள் தேவை

**அழகிய காலண்டர்களுக்கு ஆர்டர்கள் எடுக்க ஏஜண்டுகள் தேவை.**

ரூ. 15 முன்பணம் அனுப்பினால் ஆல்பம் வகையறா அனுப்பப்படும். மூன்று ஆர்டர்கள் வாங்கிக் கொடுத்தபின், அந்த 15 ரூபாய் திருப்பித் தரப்படும்.

விபரங்களுக்கு :—

**நாதன்-கம்பெனி,**

[காலண்டர் தயாரிப்பாளர்கள்]

**திருச்சிராப்பள்ளி.**

# எண்ணம்

சில ஆண்டுகளுக்குமுன், தமிழ்நாட்டு 'அரசியல் வெட்டுக்கிளி'களின் எண்ணிக்கையைச் சேர்ந்த ஒருவர், 'இந்தத் தென்னாடு, வடநாடு பிரிவினையை, 'இந்தத் தென்னாட்டிலே உள்ள வேறு மொழி பேசுவார் யாராவது ஆதரிக்கிறார்கள் என்பதற்கு அண்ணாதுரையால் ஆதாரம் காட்டமுடியுமா?' என்று ஒலிபெருக்கி வசதி கிடைக்கின்ற இடங்களிலெல்லாம் பேசிக்கொண்டு வந்தார். அதற்கு அண்ணா அவர்கள் ஒரு கூட்டத்தில் 'ஆதரிக்கவில்லை என அங்கலாய்ப்பேரே, எதிர்ப்போர் யார்?' என்று பொருள் படக் கேட்டார். ரத்தினச் சுருக்கமான இந்தப் பதிலை, பிரச்சினையைக் கிளப்பியோர் புரிந்துகொண்டாரோ என்னவோ? தென்னாடு என்று சொல்லப்படுகிற, தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் என்ற நான்கு மொழிகள் பேசப்படும் நிலப்பரப்பில் தென்னாட்டுப் பிரிவினைக் கிளர்ச்சியை தமிழ்நாடு நீங்கலாக வேறு எந்தப் பகுதியிலும் எதிர்க்கவில்லை; எனவே, ஆதரித்துப் பேசி, களத்திலே குதிக்கத் துணிவு இன்னும் பிறக்கவில்லையே தவிர அவர்களின் மௌனம் எதிர்ப்புக்கு அடையாளமல்ல என்ற கருத்தையே அண்ணா அவர்கள் சுருங்கச் சொன்னார்கள். அன்று காணப்படாத துணிவு, இன்று அரும்பு விட்டிருக்கிறது; அன்று ஒலிக்காத இலட்சிய ஓசை இன்று கதிர் பாய்ந்து காணப்படுகிறது. பொறுப்புள்ள மனிதர் ஒருவர் பேசியிருக்கிறார் படியுங்கள்.

''கைத்தொழில் அபிவிருத்தி முதலியவற்றில் வட இந்தியாவை உத்தேசிக்குங்கால் தென்னிந்தியாவை மத்திய சர்க்கார் புறக்கணித்திருக்கிறது என்பது புலனாகிறது. ராஜ்யங்களில் உள்ள மத்திய சர்க்கார் தொழில் நிலையங்களில், ராஜ்யசர்க்கார்களுக்கு, மத்திய சர்க்கார் எவ்வித ஆதிபத்தியமும் அளிக்கவில்லை. ஆனால் இவற்றிற்கெல்லாம் ராஜ்யசர்க்கார்கள் நிதி முதலிய உதவிகள் அளித்திருக்கின்றன.''

இது யாருடைய வாய்மொழி? தென்னாட்டைப் பிரிக்க வேண்டுமென்பதையே ஜீவலட்சியமாகக் கொண்ட திராவிடர் இயக்கத்தினரில் யாரேனும் ஒருவர் விரித்துக் காட்டிய ஆதாரமா? இல்லை!

மைசூர் கைத்தொழில் மந்திரி எச். எம். சென்னபாசப்பா அவர்கள் வேதனையோடு இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கிறார். எங்கோ, எதிர்க்கட்சிக்காரர்களின், மத்தியிலே பேசி கைதட்டல் பெறவேண்டும் என்ற நோக்கத்தோடு அமைச்சர் சென்னபாசப்பா அவர்கள் இவ்வாறு பேசினார்கள் என்று கருதிவிடவேண்டாம். மைசூர் காங்கிரஸ்காரர்கள் கூட்டத்திலேயே அமைச்சர் மேற்கண்டவாறு பேசியிருக்கிறார்.

சென்னபாசப்பா அவர்கள் வெறும் வாய்ப்பேச்சோடு நின்றுவிடவில்லை; உதவிக்குமட்டும் மாநில அரசினரிடமிருந்து மத்திய சர்க்கார் பெறுகின்றதே, அந்த உதவிக்குக் கைமாறு எங்கே என்றும் அதட்டிக் கேட்டிருக்கிறார். இந்த உரிமைக்குரல் இமயத்தின் அடிவாரத்திலே மோதி எதிரொலிக்குமா என்று யாரும் ஐயுறத் தேவையில்லை. அமைச்சர் சென்னப்பா அவர்கள் மற்றொரு தித்திப்பான செய்தியையும் தெரிவித்திருக்கிறார். மத்திய சர்க்காரின் ஓரவஞ்சனை குறித்து, திருவாங்கூர் கொச்சி மந்திரிகளுடனும், சென்னையிலிருந்து டில்லி போய் வரும் பாராளுமன்ற உறுப்பினர்களுடனும் தான் கலந்து பேசியிருப்பதாக சொல்லியிருப்பதோடு, தென்னிந்திய ராஜ்ய மந்திரிகள் மாநாடு கூட்டப்போவதாகவும் பேசியிருக்கிறார். தென்னிந்திய ராஜ்யங்கள் என்று அவர் குறிப்பிட்டிருப்பது தமிழ், தெலுங்கு, கேரளம், ஆந்திரம், ஆகிய ராஜ்யங்களின் மந்திரிகள் என்பதை-திராவிட நாட்டு மந்திரிகள் என்பதை மறந்துவிடக் கூடாது. ஆமாம் திராவிட நாட்டு மந்திரிசபையைக் கூட்டப்போவதாக திரு. சென்னபாசப்பா அவர்கள் கூறியிருக்கிறார்கள். இது மகிழ்ச்சிக்குரிய சேதிதான். அகராதியை வைத்துக்கொண்டு இரவு பகலாக எதுகை, மோனை தயாரித்து 'இவர்கள் இணங்குகிறார்களா? அவர்கள் ஆதரித்தார்களா?' என்று கேட்போருக்கு சென்னப்பாவின் திட்டம் திகிலூட்டுவனவாகத்தான் அமையும்.

திராவிடநாட்டு மந்திரிசபை அமையட்டும்! நடக்கப்போகிற காரியமா இது என்று நாக்கைச் சுழற்றியோரை நம்பக்கம் இழுத்துவரட்டும். மனதிலே உருவான இந்தத் திட்டத்தை மைசூர் அமைச்சர் நிகழ்ச்சியாக்கிக் காட்டி செயலில் ஈடுபடத் தூண்டுகிறோம்--வேண்டுகிறோம். ★

நண்பர்கள் சிலர், காவிய நடை கடுமையாக இருப்பதாக எழுதுகிறார்கள். வீர காவியத்திற்கு அந்த நடையும் அத்தகு சொற்களும் வேண்டுமென்றுதான் அவ்வாறு எழுதுகிறேன். புரிந்துகொள்ள முயலுங்கள். கடினச் சொற்களுக்கு உரையும் தந்துள்ளேன். காவியம் முடிய இரண்டொரு வாரம் நீளுமென்றே கருதுகிறேன். தொடர்ந்து எழுதுமாறு கேட்ட நண்பர்கள் பலரும் மகிழ்க!

# கல்லக்குடி மாகாவியம்

—— கண்ணதாசன் ——

(வேறு)

அணியொன்றுக் கிருபத்து நால்வர்விதம்
அடலேறு நிகர்மறவர் தானைக்கூட்டம்
பணிபுரியப் போமாறும்—மிச்சமுள்ளோர்
பாசறையில் தங்கிமறு நாளைப்போரில்
அணி அணியாய்ப் போமாறும் விதிவகுத்து
ஆணையென விதித்திட்டார்—முதலிற்செல்லும்
தணியாத ஆசையினிற் 'கருணா' வீரத்
தளபதியாய் முதலணியை நடத்தலானான்!

5

## தானைபோம் படலம்

### முதற்பகுதி

''படைவருது படைவருது!'' எனுமொழி முன்னோடும்!
''தடைபெரிது தடைபெரிது!'' எனுநிலைகள் தோன்றும்!
[1] கடைதெரியக் கடைதெரிய நடையும் விரைவாகும்!
''விடைதெரியும் விடைதெரியும்'' எனநகரம் கூடும்!

[2] துரிசிலது! வீரர்படை! தூயவர்கள்தானை!
[3] கரிசனையில் ஒன்றுபடு காளையர்கள்சேனை!
வரிசைநடை! அணுவளவும் விலகவில்லபாராய்!
அரசர்களும் நடையிதனை அறிந்ததில்லை நேராய்!

'எடுத்த அடிஒன்று' எனில்வடவர் படைத்தலையில்
அடித்த அடிஒன்று எனஅளந்து சொல்லும்நிலையில்
[illegible]
அந்தத்திருக்கும் பகைவர்வெறும் தூசெனல்போலும்!

(வேறு)

நம்புலத்திடையில் வந்திருப்பதொரு தந்திரப்பகைவர்தானை!
நம்படைப்பகுதி-வெம்பகைத்தொகுதி-கொம்பெடுத்த மதயானை!
அம்பெடுத்து-வெடிகுண்டெடுத்து-நமைக்கொன்றழித்து
விடுபோதும்,
தெம்பெடுத்து மறுநம்படைப்புலிகள் நின்றெதிர்த்து
அதைமோதும்!

[4] என்றுலம்பித் துரைத்தம்பி மார்கள்செலும் இன்பந்தன்னை
விழியாலே
தின்றுதீர்த்துவிடும் எண்ணங்கொண்டு நகர்மைந்தர்
கூடும்இமைக்காதே!
அன்றுத்ராவிட முன்வேற்றவாலிபர்தம் அணிவடிக்கும்
வரலாற்றை
சென்றுபார்த்துவிட வந்தபேர்கள்பதினைந்து ஆயிரம்அவ்வேளை!

[5] காலவத்தில் விளையாடவந்தவட காதகர்தம்படைவீரர்
[6] சாலிகைகள் அணிசேவகர்கள்பலர் டால்மியாவின்அருளாளர்
[7] நிலவாகனத்தில் சூழ்ந்திருந்துகூட நேரம்பார்த்திருக்கும்காட்சி
சாலநாட்டினையும் ஆளஎண்ணும் சதிகாரர்தம் மனதின்சாட்சி!

(வேறு)

துப்பாக்கி ஏந்திச்சுடுவதற்குக் காத்திருக்கும்
அப்பாவித் திராவிடரை அணித்தலைவன் காண்கின்றான்
''இப்பாக்கியம் யார்க்கு இந்நாளில் கிட்டுவது!
[illegible] ஏன்மார்பில்ஏறட்டும்!'' என்கின்றான்
[illegible]
கொப்பாகச் சேவகர்கள் கூடுகிறார்; பிரிகின்றார்
எப்போதும் போல்அங்கே எழிற்கருணாநிதிநாடன்
முப்பாலில் மூன்றாம்பால் தலைவன்போல் நிற்கின்றான்.

கொம்பெடுத்துஊதிப் படையோட்டும் குலம்போல
சங்கெடுத்துஊதித் தவழ்ந்துவரும் புகைவண்டி,
கம்பெடுத்து நிற்தம்காவலர்க்கும் ஆணையிட்டு
பங்கெடுக்கத்தாவும் நம்படைகளையும் வரவேற்கும்!

'தம்பி'எனும் ஒருசொல்லும் ''தாயகமே வாழ்க!''வெனும்
இன்பமிகும் ஒருசொல்லும் ஏறிற்றுவான்முட்ட!
அன்பிருக்கும் பெயர்கொண்ட அழகுமிகும் தாவொன்றை
அம்பிருந்தகையான் அரவணைத்துச் செல்கின்றான்!

1 கடை--எல்லை; 2 துரிசு--குற்றம்; 3 கரிசனை--அன்பு;
4 உலம்பி--[illegible]; 5 காலவம்--நெருப்பு;
6 சாலிகை--கவசம்; 7 நிலவாகனம்--''போலீஸ்வான்''!

(5-ம் பக்கம் பார்க்க)




## களம் 15

காட்சி : 15
இடம் : பெருங்கோதமன் வீதி
நேரம் : பகல்

[அரசவையிலிருந்து ஆத்திரமாக வந்த அம்பிகாபதி, பெருங்கோதமன் வீதியில் சிந்தனை தேங்கிய முகத்தோடு வந்து கொண்டிருக்கிறான். அவன் இதயத்திலே எண்ணங்கள் அலை மோதிச் சிதறுகின்றன.]

**அம் :** இதயம் : அம்பிகாபதி இப்போது தனி ஆள்! உற்றார் உறவினர் யாரும் இல்லை! தமிழ்ப்பண்பு, தமிழ்பண்பாகவே இயங்கவேண்டுமென்று கருதும் அம்பிகாபதிக்கு...யார் துணையிருக்கப்போகிறார்கள். அடைத்துத் திறந்துவிடும் மடை-ஆணைக்குப் பணிந்துவரும் கவி... சோழநாட்டின் கவிஞர்கள் அப்படித்தான் ஆய்விட்டார்கள்! ஆடும் மலரின் அசைவில் பிறந்து, அழியா அழகுக் கடலாய் மலர்ந்து பாடும் இயற்கையெனும் பாவை இதழ் திறந்து, பாடுபாடென்று ஓடிவந்தாலன்றிப் பாடமாட்டேன் என்றிருந்த புலவர் பரம்பரை முடிந்துவிட்டது! 'இன்னது பாடு' என்று சொன்னதும் பாடுவது கவிதை-பாடுவோன் கவிஞன்...சீச்சீ! இந்த நாடு ஏன் சாம்பலாகி விடக்கூடாது! இப்போதே இந்நாட்டை ஏன் கடல் கொள்ளக்கூடாது! இழிந்த கதை அரங்கேறு முன்னரே, அது நடந்துவிட்டால், எதிர்கால சந்ததிகள் கேவல மரபிலே கலந்துவிடமாட்டார்களே!

[ஆங்கூர்க்கிழத்தி ஆய்தேவி, அவ்வையார், மோனமாகவி, பெருங்குடி வணிகர் முத்தரசப்பர், செம்பியன் நாட்டார் முதலியோர், இரண்டு ரதங்களில் வந்துகொண்டிருக்கிறார்கள். அம்பிகாபதி, இலக்கியக் கழக மனையைத் தாண்டி வந்து விட்டான். வேகமாக வந்த ரதங்கள், அவனுக்குச் சற்று முன்பு சென்று நிற்கின்றன. முத்தரசப்பர், கீழே இறங்கி...]

**முத் :** அம்பிகாபதி! வா! கொஞ்சம் பேசவேண்டும்!

**அம் :** இல்லை! என்னைத் தனியே விடுங்கள். உலகிலே எனக்கு இனி எந்தப் பற்றுதலும் இல்லை!

**முத் :** (சிரித்து) சுலபக்கொதிப்பு! தம்பீ! எல்லாம், இல்லம் சென்று பேசலாம். வா!

**அம் :** இல்லை! என்னைத் தொல்லைப்படுத்தாதீர்கள்.

[அவ்வையார், ஆய்தேவி முதலியோர் கீழே இறங்கி வருகிறார்கள்.

**அவ் :** மகனே! நீ பேசாமல் வா! நீ என்ன நினைக்கிறாயோ, அது நடக்கும்!...பிறகென்ன! வா!

[அம்பிகாபதி அரை மனதுடன் அவர்களோடு செல்கிறான். எல்லோரும் ரதங்களில் ஏறிக்கொள்ள, ரதங்கள் புறப்படுகின்றன.]

—காட்சி முடிவு—

## களம் 16 (2-8)

காட்சி : 16
இடம் : கம்பன் இல்லம்.
நேரம் : பகல்.

[கம்பன், புகழேந்தி, சடையப்ப வள்ளல், இணையார மாரப்பர், ஏகம்பவாணர் முதலியோர் அமர்ந்துள்ளனர். கம்பன், கவலையோடு காணப்படுகிறான். ஏகம்பவாணர் சிந்தனையிலிருக்கிறார்.]

**புகழேந்தி :** அம்பிகாபதி, இதற்கு இவ்வளவு கொதித்திருக்க வேண்டியதில்லை...

**சடை :** அவன் கொள்கை அவனுக்கு!

**கம் :** ஏன் ஒப்பினேன், நான்? எண்ணிப்பார்க்க வேண்டாமா! நான் மறுத்துவிட்டேன் என்றால், இராமகாதை பாடுவது நின்றுவிடுமா! ஈஸ்வர சிவன், எப்படியும்-குலோத்துங்கனைத் தூண்டி-இராமகாதையைத் தமிழாக்கி விடுவான். ஒட்டக்கூத்தன், அதைச் செய்து முடிப்பான்! வாணியன் தாதனே அதற்கு நான் என்று வருகிறான் என்றால்......

**ஏகம் :** அவர்கள் பாடிப் போகட்டுமே. உனக்கென்ன என்பது தான் அம்பிகாபதியின் கேள்வி!

**கம் :** அவர்கள் பாடினால், வடமொழி மரபு அப்படியே தமிழுக்கு வரும். நான், தமிழ் மரபில் பாடுவேன்...ஒன்று நடந்துதான் தீருமென்னும் நிலையில், திருத்தமாக செய்வதில் பெருமைப்படத்தானே வேண்டும்!

**ஏகம் :** வாதத்துக்குச் சரிதான்! ஆனால்...கூத்தன் பாடும் இராமகாதை குரங்கு வரைந்த ஓவியமாயிருக்கும்...வாணியன் தாதன் பாடுவானானால், மாடு, சாணத்தில் கோலம் போட்டதுபோல் இருக்கும்!...இராமகாதை காவியமாக இருக்கும்...ஆனால், கரையான்கள்தான் படிக்கும்! நீ... கம்பன்...தமிழுக்குக் கம்பன்...பாடினால், தெள்ளிய நீரோடையின் மேற்பரப்பில், உள்ளிருக்கும் மண்ணும் கல்லும் உருண்டு செல்வது தெரிவதுபோல்...அள்ளி விடும் நெஞ்சை! அம்பிகாபதி அறிவான், இதை! நிர்வாண ஓவியம் எல்லோர் கண்ணிலும் படும்...குழப்பமில்லாத காவியம், எல்லோரையும் மயக்கும்...கம்பன் பாடும் இராமகாதை, குறளையும் சிலம்பையும் பின்தள்ளி விட்டு முன்னால் நின்றுவிடலாம்! விளைவு...காவியச் சுவையில் தலைதூக்கும் கம்ப காவியம், இனப்பண்புக் காவியத்தை இருந்த இடம் தெரியாமல் அடித்துவிடலாம்! மக்கள் மனதில் இராமகாதையே மேலோங்கி நிற்கலாம்! இது நேர்ந்தால்......

**கம் :** பெருமைதானே கம்பனுக்கு! மகனுக்கில்லையா, அது!

**ஏகம் :** இல்லை!

**கம் :** என்ன!

**ஏகம் :** காவியச் சுவையின்மூலம், வடமொழிப் பண்பும், கதையும், தமிழின் பண்பையே அழித்துவிடும். "கண்ணகியின் பெருமையைக் காணீர்" என்று சொல்லும்போதே, "சீதையின் சிறப்பினைக் கேளீர்!" என்றும் சொல்ல நேரும். சீதையின் கற்பு, கண்ணகியின் கற்புக்கு அருகில் நிற்கலாமா? முடியுமா? எண்ணிப்பார்!

**கம் :** கண்ணகியின் வடிவத்தைச் சீதைக்குக் கொடுத்து விட்டால்...

**ஏகம் :** கருப்பு நாயை வெள்ளை நாயாக்கக் கல்லைப்போட்டுத் தேய்த்ததுபோல் இருக்கும்!

**கம் :** பத்தினிப்பெண்டிருக்கு மொத்தமாக உள்ள குணங்களைக் கூறிவிட்டால்...

**ஏகம் :** சுத்தம் செய்கிறான்...தூய்மை பூசுகிறான் கம்பன்..."உள்ளத்தால், வாக்கால் தவறினேனில்லை" என்று வால்மீகி ராமாயணத்தில், "காயத்தில் காயம்பட்டதாக" இலைமறைகாயாக-ஒப்புக்கொண்ட சீதையை மனோ-வாக்கு-காயம்மூன்றிலும் தவறுதவளாக்குகிறான் கம்பன்-என்று எள்ளிச் சிரிப்பார்கள், வடமொழி படித்தவர்கள், எதிர்காலத்தில்.

**கம் :** அப்படியே சீதையின் அந்தரங்கம் புரிந்துவிடுமானால், நாம்தான் என்ன செய்யமுடியும்!

**ஏகம் :** இப்போதே அதை மறுத்துவிட்டால் அந்த எண்ணத்திற்கே முடிவுகட்டிவிட முடியும்!

**கம் :** இனி மறுப்பதா? சிரிப்பான் கூத்தன்......சீறுவான் குலோத்துங்கன்!

**ஏகம் :** மூல முதல்வன் சிரித்தானும்; முப்புரம் எரிந்ததாம்! கூத்தன் சிரிப்பென்ன, உன் குலத்தையே எரித்து விடுமோ!

**கம் :** இல்லை! என் மனத்தை...மனவளத்தை......மக்கள்...... மதிப்பை...எரித்துவிடும்!

**ஏகம் :** எரித்துவிடும்...நீ வேறொன்றும் பாடாமற்போனால்! பாடிப்பாரேன்! தலைவன்-தலைவி..."கோவை"! கைக்கிளை, இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், பாங்கி மதியுடம்பாடு, பாங்கியிற்கூட்டம், ஒரு சார்பகற்குறி எனப்பகுதி பிரித்து அகத்துறை இலக்கியம் பாடேன்! உன்னால், பாட முடியாதா? பாடினால், படிக்கமாட்டார்களா?

**கண்ணதாசன்**

# சிலைகளும் பக்தர்களும் !

யார் எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாயினும் அவர்களின் குண நலன்கள் அவர்கள் வழிபடும் தெய்வங்களின் உருவங்களையும், அவைகளுக்கான கதைகளையும் பொறுத்தது என ஒரு ஆராய்ச்சியாளர் கூறுகிறார். இது ஆராய்ச்சிக்குரியதுதான் என்றாலும், அந்த ஆராய்ச்சியாளர் தரும் சான்றுகளைப் பார்ப்போம்.

ஒரு காலத்தில் உலகமுழுவதையும் தன்னடிமைப்படுத்தி தனி அரசு புரிந்த ரோமாபுரியைப்பற்றி, அதன் பெருமையைச் சிதைத்த ஸிதியா தேசத்தவர்களும் ஐரோப்பா கண்டத்திலுள்ள சில உத்தரப்பிரதேச மக்களும் வழிபட்டு வந்த தெய்வ உருவங்கள் கோரமானவை. அநேக சிற்றரசர்களுடைய உயிரைக் கொன்று இரக்கம் துளியும் அமையப் பெறுமல் அன்னிய வகுப்பாருடைய உதிர வெள்ளத்தில் நீந்துவதே தம்முடைய பிறவியினாலாகிய பெரும் பயனென்றெண்ணி இறுதியில் சமர்க்களத்தில் செத்த சுத்தவீரர்களே மறுமையில் கடவுளர்களாகின்றார்களென்னும் மதசித்தாந்தத்தை அந்த வகுப்பார் கொண்டிருந்தார்கள். அவ்வாறு அளவிறந்த உயிர்களை வருத்திப் போர்க்களத்தில் மாண்ட வீரர்களையே அந்த வகுப்பார் வழிபட்டு வந்த படியினால் அத்தகைய குணங்கள் யாவும் அவர்களிடத்தில் படிந்தன. நீராப்பிணியினால் ஒருவன் வருந்தி நாளாவட்டத்தில் தேகம் மெலிந்து சாதாரணமாயிறந்து போவானாயின் அப்படிப்பட்டவனுக்கு, மோட்ச சாம்ராச்சியம் கிடையாதென்பது அந்த வகுப்பாருடைய மத சித்தாந்தமாகையால் அவர்கள் மூற்றும் ஜீவகாருண்ய மற்றவர்களாகி பிற உயிரை இம்சிப்பதே, தம்முடைய பெருங்கடமைகள் என்று கருதி வந்தார்கள். இவ்வுலகத்தில் எவன் பெரும் பகைவனுயிருந்து போராடுகின்றானே அப்படிப்பட்டவனுடைய கபாலத்தையே பாத்திரமாகக் கொண்டு அதில் அவனுடைய உதிரத்தை ஊற்றிச் சதா குடித்துக் கொண்டிருப்பதுதான் ஒருவன் அடையத்தக்க சொர்க்க இன்பமென்று அந்த வகுப்பார் போன்றே மற்றும் சில வகுப்பாரின் மத சித்தாந்தமும் கூறுகின்றது. ஆகவே, அப்படிப்பட்டவர்கள் குரோதம், கோபம், கொலை, அருளில்லாமை முதலிய பெருந் துர்க்குணங்களை வகித்தவர்களாயிருந்தார்கள்.

★

முற்காலத்தில் சித்திர வித்தையினும் செதுக்கு வேலைத் தரத்திலும் புலமைபெற்றுப் பிரசித்தியடைந்தவர்கள் எகிப்து தேசத்தவர்கள். அவர்கள் அந்த சாஸ்திரத்தில் அவ்வளவு சிறந்த பண்டிதர்களானதற்குக் காரணம் அவர்கள் வழிபட்டு வந்த கடவுள் உருவங்களாம்! அந்த வகுப்பார் பற்பல மிருகங்கள், பட்சிகள், ஊர்வன முதலியவற்றின் உருவங்களையே கடவுள் உருவங்களாய் பாவித்து அவற்றைச் சிலைகளிலும் பலகை முதலியவற்றிலும் மிகவும் அழகுபெறச் சித்தரித்து எழுதி அவற்றிற்கு வந்தனை வழிபாடு செய்து வந்தார்கள். இப்படிப்பட்ட உருவங்களை சதா அவர்கள் மனதில் படிந்திருந்த காரணத்தினால்தான் அந்த வகுப்பார் சிற்ப சாத்திரத்தில் ஆதியில் அவ்வளவு திறமை யடைந்திருந்தார்கள்.

★

கிரீஸ் தேசத்துப் பிரதான பட்டணமாகிய காரிந்து என்னும் நகரவாசிகள் காமனை உருவமாகக் கொண்டு வழிபட்டு வந்தார்கள். அதனால் அவர்கள் காமாந்தகாரத்தில் மூழ்கி நாளாவர்த்தியில் மெலிந்துபோயினர்.

இந்துதேசத்தில் காளி, துர்க்கை முதலிய கோர மூர்த்தங்களை வழிபட்டு வருபவர்கள் அம்மூர்த்தங்களின் குணங்களைப் பெற்று கோபிகளாகவும் கொலைபாதகங்களுக்கு அஞ்சாதவர்களாகவும் மது, மாமிசம் உண்போராகவும், வன்னெஞ்சர்களாகவுமிருக்கின்றார்கள்.

(மெதுவாக) கம் : உங்களுக்கும் இது சம்மதமில்லையா !

ஏகம் : இல்லை ! அம்பிகாபதியின் கருத்தே, என் கருத்தும் !

[இதுவரை பேசாமலிருந்த புகழேந்தி]

புக : நானும் அப்படித்தான் நினைக்கிறேன்...ஆனால், இனி மறுப்பது முறையல்ல !

கம் : ஆம் ! நான் பாடத்தான் போகிறேன் ! அதன் விளைவு எது வானாலும் கவலையில்லை !

ஏகம் ; மனம்போலச் செய் ! மறுப்பரில்லை ; ஆனால் ஒன்று ; இனி அம்பிகாபதி என் மகன் ! நீ அவனை மறந்துவிடு !

[ஏகம்பவாணர் தள்ளாடியவாறு வெளியேறுகிறார். கம்பன் திகைத்து நிற்கிறான். புகழேந்தி, ஏகம்பவாணரை அழைப்பார்போல் எழுந்து மீண்டும் அமர்கிறார்.]

—காட்சி முடிவு—

( தொடரும் )

—அடுத்த இதழில், ஆயிதேவி இல்லத்தில் அவ்வையைச் சந்திக்கவந்த அமராவதி, அம்பிகாபதியைச் சந்திக்கும் கட்டம்—

## கல்லக்குடி மாகாவியம்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

### 7

### போர்புரி படலம்

'டால்மியா' பெயர்கொண்டு தலைதாழ்ந்த பலகையினை
வேல்வியாபாரியின் கைமேவுதடா ! மூன்றுதமிழ்க்
கோலாண்ட காலத்துக் கல்லக்குடி சூட்டி
நேராகத் தலைதூக்கி நிற்குமா றேற்றுதடா !

"கல்லக்குடி சூட்டக்களம் போனநம்குடிதான்
கொல்லர்குடி வார்க்கும் கொடுவாளிற் சிவப்பேற்றி
வெல்லுங்குடி மறவர்வீரத் தமிழர்குடி !
வில்புலிமீன் கொடிதூக்கி வீதிவரத் தகுந்தகுடி !

நானும் தமிழனென நாவாட்டும் மற்றகுடி
தேனும் தினைமாவும் தெள்ளிய நீரோடைகளும்
தோன்றும் தமிழ்நாட்டில் சூழும் கயவர்குடி !
பேனேடுசேறும் பெருகிவரும் மாதர்முடி !"

அங்கிருந்த பல்லோரும் அளித்த மொழியிதனை
தெங்கெடுத்து விளையாடும் தென்னாட்டார் செல்வமகன்
பொங்கு முழக்கங்கொண்டு-பூரித்துக் கேட்கின்றான் !
தங்கநிகர் தோழரெலாம் 'தமிழ்வாழ்க' என்கின்றார் !

(தொடரும்)


பேராசிரியர் சுந்தரனார் நாடக கலைக் கழக சார்பில்

**பட்டமளிப்பு விழா**

திருவாங்கூர் சகோதரிகள் பத்மினி, ராகினி இருவருக்கும் முறையே "கலையரசி", "கலைமணி" பட்டங்கள் வழங்கப்படும்.

காலம் : 14-8-55 ஞாயிறு காலை

இடம் : கெயிட்டி தியேட்டர், மவுண்ட் ரோட்.

இத்துடன் இல்லறஜோதி படம் காண்பிக்கப்படும்.

நன்கொடை உண்டு.

பேராசிரியர் சுந்தரனார் நாடக கலை கழகம், சூளை, சென்னை.


**கண்ணதாசன் சுற்றுப் பயணம்**

7-8-55 காரைக்குடி (நாடகம்)
8-8-55 திருமலைராயன்பட்டிணம் (கூட்டம்)
14-8-55 பெரம்பூர் (கூட்டம்)
21-8-55 சௌகார்பேட்டை (திருமணம்)
28-8-55 காலை மன்னார்குடி (திருமணம்)
மாலை : மாயூரம் (கூட்டம்)


கே. எஸ். பாண்டியன் படிப்பகம், திருவல்லிக்கேணி

**இரண்டாம் ஆண்டு விழா**

7-8-55 ஞாயிறு மாலை 5-30 மணிக்கு திருவல்லிக்கேணி கடற்கரையில் நடைபெறும்.

தலைவர் : காஞ்சி கலியாணசுந்தரம்

பேசுவோர் :

**அறிஞர் அண்ணா**

P. R. கோகுலகிருட்டிணன், B A., B.L. மற்றும் பலர்.

இசை : இரா. சண்முகம்.

சண்பகவேல், செயலாளர்.


## அறிவிப்பு

தென்றல் - அடுத்த இதழ் வழக்கம்போல் பனிரெண்டு பக்கங்களோடு வெளிவரும்.

★

'உலகியற்றியான்' கட்டுரை அடுத்த இதழில் இடம் பெறும்.

## வெண்பாப் போட்டி 14.

★

ஈற்றடி :

பொய்யடா பொய்யடா பொய் !

முடிவு தேதி 20-8-55

# வளமிகுத்த ஆலையெலாம் வடவர்களின் சொந்தம்
# வழக்கம்போல் திராவிடத்தில் எல்லாமும் மந்தம்!

# வாழ்வது எப்படியோ?

(6)

## பஞ்சாலேகள்

இன்றைக்கு 2255 ஆண்டுகளுக்கு முன்பு தமிழகத்தில் அருமையான நூலாடைகள் நெய்யப்பட்டு ஐரோப்பிய நாடுகளுக்குத் தமிழ்நாட்டுக் கப்பல்களில் கொண்டு செல்லப்பட்டன என்பதற்குத் தெளிவான சான்றுகள் உள்ளன.

அடுத்து இந்தியத் துணைக்கண்டத்தில் நெசவு சிறப்புப் பெற்றது, மொகலாயர்கள் காலத்தில் 300 ஆண்டுகளுக்குமுன் மஸ்லின் ஆடைகள் நெய்யப்பட்ட காலமாகும். வெள்ளையர் வசம் இந்தியத்துணைக்கண்டம் அகப்பட்டபின், வெள்ளையர்கள், அப்போது உலகச் சிறப்புப் பெற்றிருந்த மஸ்லின் நெசவுத் தொழிலைச் சாகடித்து, லங்காஷையர் (பிரிட்டிஷ்) நெசவைச் சிறப்பித்து லாபம் ஈட்ட திட்டம் வகுக்கலாயினர். இந்தியத் துணைக்கண்டத்தில் விளையும் பருத்தி இங்கிலாந்துக்கு ஏற்றுமதியாகி, அங்கு ஆடைகளாக நெய்யப்பட்டு மீண்டும் இந்தியத்துணைக்கண்டத்தில் இறக்குமதியாகி விற்பனைக்கு வந்தது. கொள்ளை லாபம் வெள்ளை வணிகர்களுக்குக் கிடைத்தது.

முதன் முதலில் 1818ல் இந்தியத்துணைக்கண்டத்தில் வெள்ளையரால் 'பவரியா காட்டன்மில்' எனும் பெயரில் ஒரு பாஞ்சாலை தொடங்கப்பட்டது. பின்னர் 1854 ல் பம்பாய் வணிகர்கள் மற்றொரு பஞ்சாலையைத் தொடங்கினர். பின்னர் 1859 லிருந்து 1876 க்குள் 47 புதிய ஆலைகள் இந்தியத் துணைக்கண்டத்தில் தோன்றின. ஆனால் அனைத்தும் பம்பாய் நகரத்தையும், கல்கத்தா நகரையும் சுற்றியே அமைக்கப்பட்டன.

இருப்பினும் வெள்ளை சர்க்காரின் சலுகையின்மையால் லங்காஷையரோடு போட்டிபோட முடியாமல் இந்திய ஆலைகள் தவித்தன. பின்னர் 1904 லிருந்து 1910 க்குள் இந்திய ஆலைகளில் வாணிபத்தில் புது முறுக்கேறியது. அப்போது மக்களிடையே தோற்றுவிக்கப்பட்ட 'சுதேசி இயக்கம்' 'இந்திய' ஆலைகளுக்குப் புத்துயிர் அளித்தன.

இன்று ஆலைத்தொழில் ஆடைத்தேவையைப் பூர்த்தி செய்வதோடன்றி, வெளிநாட்டு ஏற்றுமதியில் முக்கிய இடத்தை வகித்து நாட்டின் வருமானத்தை உயர்த்தியுள்ளது. இவைகளையெல்லாம்விட, பல இலட்சக் கணக்கானவர்களுக்குத் தொழில் அளித்துள்ளது.

தென்னாட்டில் உள்ள மிகப் பெரிய தொழில் (industry) ஆலைத் தொழில்தான். இதிலும் வடநாடே ஆலைகளின் எண்ணிக்கையிலும் உற்பத்தியளவிலும், தொழில் பெற்றோர் தொகையிலும் மிஞ்சி நிற்கிறது. மேலும் அதிவேகமாக வளர்ந்தும் வருகிறது. கீழ்க்கண்ட விவரம் நமக்கு விளக்கம் தரும்.

| | ஆலைகள் | கதிர்கள் (Spindles) | தறிகள் (Looms) | தொழிலாளர்கள் (சராசரி) |
|---|---|---|---|---|
| தென்னாட்டில் (சென்னை, ஆந்திரம், திரு. கொச்சி, ஐதராபாத், மைசூர், புதுச்சேரி ஆகியவை) | 124 | 26,24,138 | 18231 | 85,558 |
| வடநாட்டில் | 333 | 90,97,001 | 1,89,019 | 3,49,580 |

இந்தத் தொழில்தான் தென்னாட்டில் மிகப் பெரிய இயந்திரத் தொழில் என்றாலும், இதிலும் தென்னாடு வடநாட்டுக்குத் தலைதாழ்ந்துதான் உள்ளது. நாம் தாழ்வுற்றுக் கிடக்கும் நிலையைப் பின்வரும் விவரங்களை உற்றுநோக்கினால் அறியலாம்.

1. ரூபாய் 20 லட்சத்துக்குமேல் ரூ 40 லட்சம் வரை மூலதனம் போட்டு நடத்தப்படும் ஆலைகள்.

| எண் | தென்னாட்டில் | மூலதனம் |
|---|---|---|
| 1 | அழகப்பா டெக்ஸ்டைல்ஸ் | 25,00,000 |
| 2 | கம்போடியா மில்ஸ் | 21,00,000 |
| 3 | கோயம்புத்தூர் பயனீர் மில்ஸ் | 21,00,000 |
| 4 | கோயம்புத்தூர் ஸ்பின்னிங் அண்டு வீவிங் கம்பெனி | 20,76,900 |
| 5 | தனலட்சுமி மில்ஸ் | 24,34,800 |
| 6 | கபிலா டெக்ஸ்டைல் மில்ஸ் | 34,87,348 |
| 7 | கோத்தாரி டெக்ஸ்டைல்ஸ் | 36,00,000 |
| | (வடநாட்டார் ஆதிக்கம்) | |
| 8 | மைசூர் ஸ்பின்னிங் அண்டு மான்யுபேக்சரிங் கம்பெனி | 27,33,260 |
| | (வடநாட்டு ஆதிக்கம்—டைரக்டர்கள் அனைவரும் வடநாட்டவரே) | |
| 9 | இராதாகிருஷ்ண மில்ஸ் | 25,30,420 |
| 10 | இராயலசீமை மில்ஸ் | 22,14,527 |
| 11 | ஸ்ரீ கணேசர் டெக்ஸ்டைல்மில் | 26,08,952 |
| 12 | ஸ்ரீசங்கரா டெக்ஸ்டைல்மில் | 20,70,285 |
| 13 | ஸ்ரீகிருஷ்ண ராஜேந்திரா மில்ஸ் | 36,69,700 |
| 14 | வசந்தா மில்ஸ் | 25,50,000 |

மெய்ச்செல்வம் எது? எங்கே அது? என் பதுபற்றி ஆதாரங்களோடு விளக்குகிறார்............
ஈ.வே.கி.சம்பத்

| எண் | வடநாட்டில் | மூலதனம் |
|---|---|---|
| 1 | பஸந்திகாட்டன் மில்ஸ் | 20,00,000 |
| 2 | பெங்கால் நாக்பூர் காட்டன்மில்ஸ் | 30,00,000 |
| 3 | பிராட்பரி மில்ஸ் | 24,85,000 |
| 4 | கான்பூர் டெக்ஸ்டைல்ஸ் | 30,00,000 |
| 5 | கூர்லாஸ்பின்னிங் அண்டு வீவிங் | 26,00'000 |
| 6 | எட்வர்ட் டெக்ஸ்டைல்ஸ் | 34,00,000 |
| 7 | கெய்க்வார்மில்ஸ் | 20,00,000 |
| 8 | கோகாக் மில்ஸ் | 39,04,700 |
| 9 | ஹிண்டுஸ்டான்ஸ் பின்னிங் அண்டு வீவிங் | 24,00,000 |
| 10 | ஹிண்டுஸ்டான் உல்லன் மில்ஸ் | 34,98,625 |
| 11 | டி. கே. காட்டன் மான்யுபேக்சர்ஸ் | 22,30,000 |
| 12 | மதுசூதன்மில்ஸ் | 35,10,000 |
| 13 | மினர்வாமில்ஸ் | 29,80,884 |
| 14 | மாடர்ன்மில்ஸ் | 22,13,050 |
| 15 | நியூசிட்டி ஆப் பாம்பே மான்யுபேக்சரிங் கம்பெனி | 24,00,000 |
| 16 | நியூகமர்ஷியல் மில்ஸ் | 35,25,000 |
| 17 | நியூக்ரேட் ஈஸ்டர்ன்ஸ் பின்னிங் அண்டு வீவிங் கம்பெனி | 38,00.000 |
| 18 | ராம்பூரா காட்டன்மில்ஸ் | 24,47.750 |
| 19 | சேசூன்ஸ்பின்னிங் அண்டு வீவிங் | 25,00,000 |
| 20 | ஷரீ அம்பிகாமில்ஸ் | 37,50,000 |
| 21 | சிம்ப்ளக்ஸ்மில்ஸ் | 31,50,000 |
| 22 | ஸ்ரீராதேஸ்யம் மில்ஸ் | 20,00,000 |
| 23 | ஸ்வான்மில்ஸ் | 24,00,000 |
| 24 | டாடாமில்ஸ் | 32,54,438 |
| 35 | விக்டோரியா மில்ஸ் | 24,00,000 |
| 26 | வெஸ்டர்ன் இண்டியா ஸ்பின்னிங் அண்டு மான்யுபேக்சரிங் கம்பெனி | 24,00,000 |

# எழில்மிகுத்த திராவிடனே, விவரங்கள் கண்டும்
# இன்னும் நீ தூங்குவையேல் இறந்தொழிதல் நன்றாம்!

# வெண்பாப் போட்டி

## 12. வாள்கொண்டு தாக்குவோம் வா !

வெண்பாப் போட்டி 12-ன், பரிசுபெற்ற வெண்பாவும், பிரசுரத்திற்குத் தகுதியுடைய வெண்பாக்களும் சென்ற இதழில் பிரசுரமாயின ; தகுதியுடையன சிலவற்றை இந்த இதழிலும் வெளியிட்டுள்ளோம்.

புகைநிலையக் தன்னிற் புகழ்தமிழை நாட்டுதற்கே
'தகை'யிந்தி யாமதனை நாமழிக்க--வகைகெட்டு
ஆள்வோரின் ஆளாகி ஆங்கே எதிர்ப்போரை
வாள்கொண்டு தாக்குவோம் வா.

—ச.மருதமுத்து, உடுமலை.

★

கண்ணே ! கவின்தென்றல் ! காட்டிக் கொடுத்தானை
மண்ணிற் சிறந்தான் எனமதித்துத்--தென்னவர்தம்
கோள்கண் டுறுமுகின்ற 'கொள்கையிலாக் கூட்டத்தை'
வாள்கொண்டு தாக்குவோம் வா.

—இராவை எழில், இராங்கியம்.

★

ஓங்குமலை மீதில் உயர்கொடி நட்டவரின்
தீங்கனிசால் நாட்டிஆர் பேர்மாற்றித்--தீங்கிழைத்தார் !
தோள்வீங்கு தண்தமிழா ! தூள்தான் இனி அவரை
வாள்கொண்டு தாக்குவோம் வா.

—'' உதயனைன் '' கொழும்பு 12.

★

தண்டமிழின் செவ்வேள் தலமாம் திருத்தணிகை
வண்டெலுங்கு நாடாய் வளர்வதனைக்--கண்டிதமாய்
மீள்விக்க இன்றேநாம் மேவுவோம் மாறுபடின்
வாள்கொண்டு தாக்குவோம் வா.

—வ. பாஸ்கரன், ஆரணி.

★

வேலையின்றி நஞ்சிறுர் வெம்பிப் பசிப்பிணியால்
சால வருந்துவதைத் தான்நோக்கா--மாலைக்கண்
ஆளும் வருக்கத்தார் ஐந்தாண்டுத் திட்டமதை
வாள்கொண்டு தாக்குவோம் வா.

—ஆ. கி. வரதராஜு", ஆரணி.

★

வாவிசேர் மீனுக்கு வால்காட்டிப் பின்தலையை
தாவிவரும் பாம்புக்குத் தான்காட்டும்--மாவிலாங்கின்
கோள்கொண்டு நற்றமிழ்க்குக் குந்தகம் செய்வோரை
வாள்கொண்டு தாக்குவோம் வா.

—தி. சா. தேவராசன், சென்னை-21.

★

நீள்கெண்டை போல்விழியாய் நின்னன்பால் மன்றலைத்திண்
தோள்கொண்ட யான் புணிந்தேன் தோடமென--நாள் [கொண்டுங்
கோள்கொண்டுங் கூறுமடக் கொள்கையைநம் [நுண்ணறிவாம்
வாள்கொண்டு தாக்குவோம் வா.

—கு. ப. தாயுமானசாமி, அய்யம்புதூர்.

★

வந்தவர்கள் வாழ்வுகொள மற்றையர்கள் துன்பமுற்று
நொந்துபசி யால்வாடி நீர்மைகெடத்--தந்திரமாம்
கோள்கொண்டு நாட்டின் குடிகெடுக்கும் அன்னேரை
வாள்கொண்டு தாக்குவோம் வா.

—எஸ். எ. முத்தையாத் தேவர், அசூர்.

★

சரிந்துவிழும் சாதிச் சமயப் பழக்கம்
முறிந்து விடாதபடி, வேஷ்டி--வரிந்துகட்டித்
தோள்கொடுத்து நிற்போரைத் தோழா பகுத்தறிவு
வாள்கொண்டு தாக்குவோம் வா.

—இரெ. தங்கையா பி. ஏ. பெரியநாயக்கன்பாளையம்.

தீந்தமிழா ! செம்மைத் திராவிடா ! தென்னகத்தில்
சேர்ந்திந்தி வந்திடுமேல் தீங்கேயாம்--ஈங்கிதுநம்
ஆள்ஆக நாடாள் அமைச்சர் செயல்இதைச்செல்
வாள்கொண்டு தாக்குவோம் வா.

—மா. சிதம்பரகுற்றாலம், தமிழ் வித்துவான். ஆரூர்.

★

கண்டெனடுகண் நோக்கொக்கிக் கொண்டிடும் [பான்மையல்லால்
கண்டாலை எல்லாம்நாம் கொள்வமோ ?--தண்டமிழோய் !
தோள்காட்டி நம்மையும் தொட்டிழுக்கும் இந்தியினை
வாள்கொண்டு தாக்குவோம் வா.

—ச. த. வேலன், பந்தல்குடி.

★

மடமை மடிய மனமும் மகிழத்
திடமை தினமும் திகழக்--கடமையை
தாள்பூண்டு கண்டமும் தான்சிறக்கக் கல்வியென்னும்
வாள்கொண்டு தாக்குவோம் வா.

—மலையரசன், ஆரணி.

★

கணக்கிலா தெய்வங்கள் களவபுரா ணங்கள்
பிணக்குஞ்செய் சாதிகள் போக்கி--மணமுடனே
நீளுலகில் நாம்வாழ நேர்மையிலா ஆரியத்தை
வாள்கொண்டு தாக்குவோம் வா.

—வெண்ணிலா, எருமாம்பட்டி.

★

என்றைக்கோ ஈண்டுற்றேன் இன்பத் தமிழ்நாட்டார்
தன்னை யடிமைகளாய்த் தான்கொண்டான்--அன்னேனின்
தாள்போற்றி வாழ்தல் தகுதியோ ? தண்டமிழா !
வாள்கொண்டு தாக்குவோம் வா.

—இராசம், சேங்காலிபுரம்.

★

பெண்ணும் மதிமண்ணும் பொன்னுந் துறந்தவரென்
றெண்ணும் படிநடித்து நள்ளிரவில்-பெண்களின்
தாள்கழுவித் தோள்தழுவுஞ் சாமத் துரோகிகளை
வாள்கொண்டு தாக்குவோம் வா.

—அ. இரத்தினசாமி, கோவிலூர்.

★

கற்ற இளைஞனே கன்னித் தமிழ்நாடு
உற்ற நிலைதன்னைக் காணுயோ !--இற்றைக்கே
ஆள்கின்ற ஆரியரின் ஆண்மை யொடுக்கிடவே
வாள்கொண்டு தாக்குவோம் வா.

இராம. முடியரசன், பாகனேரி.

★

கோட்டையூர் சீமான் குடிசையூர் குப்பனை
வாட்டியே நண்பா வதைக்கின்றான்--கோட்டையூர்நல்
வாழ்க்கையும் வந்தவிதங் கூறி அறிவெனும்
வாள்கொண்டு தாக்குவோம் வா.

—பி: எஸ். மணவாளன், மதுரை.

★

ஒன்றே குலமும் ஒருவனே தேவனென
நன்றே நவிலும் நமையெல்லாம்--வன்றேனா !
"நீள்புவியில் தெய்வமிலை என்றிடுவோர்" என்பாரை
வாள்கொண்டு தாக்குவோம் வா.

—கே. சீனுவாசன், செங்கல்பட்டு.

★

இந்திமொழி யைத்திணிக்க எட்டிவெறி கொண்டலையும்
மந்தமதி யாளரைமற் றிந்தமுறை--செந்தமிழா !
நீள்வரையாம் விந்தியத்தே நின்றழித்து வீழ்த்தகெடு
வாள்கொண்டு தாக்குவோம் வா.

—வி. சற்குணன், ப. புதூர்.

★

வாள்முனையால் தோற்ற வடவரசர் நஞ்சுண்ட
வாள்நுதலாள் ஈந்து வகைபெற்றார்-கோள்மாதர்
தாள்பணியா வேந்தன் தளபதியே ஆரியத்தை
வாள்கொண்டு தாக்குவோம் வா.

—கோ. நம்மாழ்வார், இளங்காடு.

★

அறம்ஓரான் எல்லோர்க்கும் அல்லலே செய்வான்
பிறர்வாழச் சம்மதியான் பாரில்--மறத்தமிழா
தோள்வலிமை இல்லான் தொடைநடுங்கக் காண்பானை
வாள்கொண்டு தாக்குவோம் வா.

—வடு. நாச்சியப்பன், செவரக்கோட்டை

★

ஆம்வட நாட்டார் அவாவுவரோ, நந்தமிழை !
நாமட்டும் இந்தி நயப்பதோ ?--சேண்மட்டும்
மூள்விக்கும் அந்தியின் மூழ்கா திளந்தமிழா
வாள்கொண்டு தாக்குவோம் வா.

—லோ. கேசவன், ச. வி. நகரம்.




# கண்ணீரும் புன்னகையும் கழறுவது யாது ?

# கற்பனையின் பிறப்பிடமும் இறப்பிடமும் கூறு!

மு. த. மதிமருதன்.

**பெர்னட்ஷாவிடம் தற்பெருமை இருந்தது ஏன் ?**

*தன் அறிவிலும், சிந்தனையிலும் நம்பிக்கையிருந்ததால்.*

புலியாசு, கண்டவாராயன்பட்டி.

**தி. மு. க. வுக்கு அரசியலில் பங்கேற்க யோக்யதை இல்லை என்று ஒரு மாஜி தி. மு. க. பிரான்மலை மாநாட்டில் குறிப்பிட்டதன் நோக்கமென்ன ?**

*பேசியவரின் யோக்யதையை வைத்து நீங்கள் ஆராய்ந்தால் ஒரு உண்மை புலப்படுகிறது. "என்னைப் போன்ற சுயநலக்காரர்கள் அரசியலை பிழைப்புக்குப் பயன்படுத்திக்கொள்ள முனைந்திருக்கும் போது இந்த தி. மு. க. ஏன் அரசியலில் பங்கேற்று எங்களையெல்லாம் செல்லாக் காசாக்க வேண்டும்" என்ற தோரணையில் பேசியிருக்கிறார் அந்த மாஜி. பாவம் ; விரைவிலே 'சேகரி'த்துக் கொள்ளட்டும்.*

ரோஷன், சகந்தராபாத்.

**மனிதனுடைய கற்பனை எங்கே பிறந்து எங்கே சாகிறது ?**

*உள்ளத்திலே பிறந்து, உலகைச் சுற்றி உள்ளத்திலேயே சாகிறது.*

கமலம், ஆலங்குடி.

**ஆச்சாரியாரை வென்றுவிட்டதாக பெருமை அடித்துக் கொள்ளும் நீங்கள்; ஆச்சாரியாரின் ஆஸ்திகப் பிரசாரத்தை எதிர்த்து நிற்கமுடியுமா ?**

*தீவிரமான எங்களுடைய எதிர்ப் பிரச்சாரம் இல்லாமலே, சென்ற வாரம் ஆச்சாரியார் ஆஸ்திகத் துறையிலும் தன்னுடைய தோல்வியை ஒப்புக்கொண்டிருக்கிறார். 'வியாசர் விருந்து', 'கண்ணன் காட்டிய வழி', 'சக்கரவர்த்தித் திருமகன்' இவைகளெல்லாம் எழுதியும், தன் சொல்லை நாட்டு மக்கள் மதிக்கவில்லை என்ற கருத்து அவர் உள்ளத்திலே கிறித்தானே, கடவுளைப்பற்றி காந்தியார் எழுதியுள்ளவைகளை மொழிபெயர்க்கப் போவதாகச் சொல்லியிருக்கிறார். இது படுதோல்வி யல்லவா !*

பா. நடராசன், கோவை.

**திராவிடநாடு எப்போது பிரியும் ? அதற்கு சுமுகமான மார்க்கமுண்டா ?**

*உண்டு ! உண்டு ! பிரதமர் நேரு, பண்டித ஜவகர்லால் நேரு எழுதிய புத்தகங்களை திரும்பப் படித்து உணர்ந்தால் போதும்.*

துரைராசன், ராயப்பேட்டை.

**மனிதர்களில் இரட்டை அவதாரம் உண்டா ?**

*இருக்கிறார்கள் ; விளம்பரமான சென்னை மந்திரிகளை உங்கள் நினைவிற்கு இருத்தவாருங்கள் ; உங்கள் வினாவிற்கு தேவைக்கு அதிகமான அளவு விடை கிடைக்கும்.*

நாகன், போம்மிடி.

**கண்ணீருக்கும், புன்னகைக்கும் உள்ள ஒற்றுமை என்ன ?**

*வனிதையரின் வனப்புக்கு மெருகிடும் சக்தியுண்டு இரண்டுக்கும் !*

எம். ஓ. சின்னையா, சென்னை-14.

**ஒரு படித்த 'பொதுஉடமை வாதி', மற்ற தொழிலாளர்களின்மீது, முதலாளிகளிடம் புகார் செய்கிறாரே அதற்கு என்ன செய்வது ?**

*'பொதுஉடமை வாதி'--இந்தப் புனிதமான பட்டத்தை ஏன் அந்தக் கண்ணுடிவிரியனுக்குச் சூட்ட வேண்டும். அஞ்சற்க, விபர்வைக்கு மாசு கற்பித்தோன் வாழ்ந்ததில்லை.*

தங்கசெழியன், யாழ்ப்பாணம்.

**ஆச்சாரியார் பிறக்காதிருந்தால் ?**

*'அரசியலில் சூழ்ச்சியைக் கையாண்டவர் அடைந்த கதி பாரீர்' என்று செத்துப்போன சாணக்கியனைமட்டும் தான் காட்டமுடிந்திருக்கும்.*

காயாம்பு, சிவகங்கை.

**செத்தவரை பிழைக்கவைக்க முடிந்தால் உலகம் என்னவாகும் ?**

*பிழைக்கவைக்கும் விஞ்ஞானியும் மூச்சுவிட முடியாமல் செத்துப் போக நேரிடும்.*

**வாழ்வின் ஜீவலட்சியம்தான் என்ன ?**

*சாவு !*

பட்டாணி, கடையநல்லூர்.

**ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்டவள் இன்னொருவனிடம் சிரித்து விளையாடினால் அவளை எந்த வகையில் சேர்ப்பது ?**

*வெகுளித்தனமோ, விரகதாபமோ!*

காந்திமதிநாதன், மூணூர்.

**காங்கிரசின் நிரந்தரச் செல்வங்கள் எவை யெவை ?**

*இருப்பதே இரண்டு தானே ! ஒன்று ராஜகோட் கல்லறை, மற்றொன்று 'ரகுபதி ராகவ ராஜாராம்' --பாட்டு.*

நாடிமுத்து, பூவந்தி.

**முதல்வகுப்புப் பாடபுத்தகம் ஒன்றில், 'ஐயர்,' 'ஒட்டர்' என்று பிரித்து எழுதப்பட்டிருக்கிறதே ; ஏன் ?**

*தீண்டாமை சுவரொட்டி கண்டு சீறிப்பாய்ந்த 'இந்து'வுக்கும், அந்தச் சீற்றம் கண்டு நடுங்கிப்போன காமராஜருக்கும் ஆதாரத்தோடு குறிப்பிட்டு அனுப்புங்கள். பலன் கிடைக்காது என்றாலும், பாசி படிந்த அந்த உள்ளங்களிலாவது படட்டும்.*

ஜி. என்., குகை.

**முட்டாள்தனமான கேள்விகளுக்குக்கூடவா நீங்கள் பதில் சொல்வீர்கள் ?**

*சொல்லாவிட்டால்தான், பதில் தெரியவில்லை யென்றல்லவா நீங்கள் முடிவுகட்டிவிடுகிறீர்கள் !*

## உனக்கும் எனக்கும்...

(1-ம் பக்கம் தொடர்ச்சி)

*உணர்கிறேன்.*

*காலமெல்லாம் உன்னை நேசித்தேன். என்னைப் பற்றி எல்லாமே நீ அறிவாய். தேவைப்படுகையில் புரட்டிப் படித்துக்கொள்ளலாமென்ற ஏடு !*

*நீ இன்றும் எனக்கு புதிர்தான் எத்தனையோ காலமாகியும்......... ஓரணுவளவாவது உன்னைப்பற்றி எனக்குத் தெரியாது. எனினும் உன்னை விரும்பினேன்......உன்னை வெறுத்தேன்...உன்னை வேதனைக்குள்ளாக்கினேன். நீயும் என்னை விரும்பினாய்; வெறுக்கவும் வேதனைப்படுத்தவும் செய்தாய்.*

*நீ என்னிடம் இரகசியங்களை எல்லாம் சொன்னாய். எனது எல்லா செய்கைகளையும் நீ கண்டாய். எல்லாவற்றையும் உலகி[...] சொல்லி என்னை கேலிச் சித்தி[...]மாக்கி விடாதே...*

*நான் போகிறேன்;*

*உன் நினைவுகள் நிறைந்த உள்ளத்தோடு. உனக்கு நினைவிரு[...]கிறதா நீயும் நானும் பிணைப்பட்[...] அந்த நாள் ?*

*கரிய இரவு நிறைந்த மழை[...] அந்த மாதிரி ஒருநாள்தான். என[...]னும் பிறப்பைப்போல நான் அதை[...] மறந்துவிட்டேன்.*

*போகிறேன்.*

*வந்ததுபோல தனியாகவே[...] போகிறேன். துணைவேண்டாம்[...] தனிமையாகவே போகிறேன்.*

*பயணத்திற்கான நேரம் நெருங்கி[...]விட்டது.*

*நீயும் நானும் என்ற உண்மை[...]யிலிருந்து கடைசியில் நீ மட்டுமா[...] மிஞ்சப்போகிறாய்.......*

**'பத்மாவதி'.**

## திருஞானசம்பந்தர் தேவாரம் பாடினாரா ?..

2-ம் பக்கத் தொடர்ச்சி

ஒவ்வொரு பதிகத்தின் கடை[...]வரியிலும் **நற்றமிழ் வல்ல ஞான[...] சம்பந்தன்** என்று தமிழினை[...] சார்ந்தும், **நான் மறைவல்ல ஞான[...] சம்பந்தன்** என்று ஆரியத்தை[...] தழுவியும் 'சம்பந்தர்' என்[...] பெயர் வைக்கப்பட்டுள்ளது. சம்[...]பந்த சரணலயர் என்ற நல்லம்[...]மான் தாமே பாடியிருக்கக் கூடு[...]மென்பதற்கு இப்பெயரொற்று[...]மையே பெரிய சான்றாகும்.

இன்னும் ஒரு நிகழ்ச்சியும் கரு[...]தத்தக்கது. எங்கும் மூன்று வயதுச் சம்பந்தரே பாடல்களைப் பாடி வந்ததாகக் கதையிருக்க ஓரிடத்தில் மட்டும் சம்பந்தர் பாடாமல், சம்பந்த சரணலயரே பாடியதாகக் குறிக்கப்பட்டுள்ளது. அங்கு அந்தச் சமயத்தில் திருஞானசம்பந்தருக்குப் பாட்டு மனப்பாடம் ஆகாதிருந்ததா, அல்லது மறந்துவிட்டிருந்ததா என்பது தெரியவில்லை.

ஒரு நாள் சம்பந்தர் குழுவினர் புத்தமதத்தார் பெருகிவாழ்ந்த **போதிமங்கை** என்ற ஊருக்குப் புறப்பட்டனர். இப்போது தஞ்சாவூர் மாவட்டத்தில் அவ்வூர் உள்ளது. அவ்வூருக்குப் பக்கத்தே ஆற்று வெள்ளம் பெருகிச் செல்லுவதைக் கண்டு பதிகம் ஒன்று பாடி, ஆற்று வெள்ளத்தைக் கடந்து அவ்வூரை அடைந்தனராம்! அங்கே வாழ்ந்த பௌத்த மதத்தவனாகிய **'புத்த நந்தி'** என்பான் ஞானசம்பந்தர் வெற்றிச்சின்னம் ஊதிவரும் ஆரவாரங்களைக் கேட்டான். உடனே கொதித்தெழுந்து எதிர்த்து வந்து "எம்மை வென்றன்றோ வெற்றிச் சின்னம் ஊதவேண்டும்" என்றனன். அதனைக் கண்டு ஞானசம்பந்தர் ஏதும் செய்ததாகக் கதையில்லை. அவரது நல்லம்மானாகிய சம்பந்தசரணலயர் என்பார் ஒரு பதிகத்தைப் பாடி 'இவன்மீது இடி விழுக' என்றாராம். உடனே அவன் இடிவிழுந்து இறந்தானாம்! எனவே வரலாற்று ஆய்வாளர்கள் சம்பந்த சரணலயரின் கவிபாடும் திறமையையும் குழந்தை சம்பந்தரின் மனப்பாடத் திறமையையும் பகுத்தறிந்து உலகிற்கு உண்மை உணர்த்தவேண்டும்.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன். எ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை - 6.